ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2401/21 - 2024 සැප්තැම්බර් මස 11 වැනි බදාදා - 2024.09.11
*2401/21 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவு, 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்கிரமசிங்க**
*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.*

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024 ஆண்டு செத்தெம்பர் 11.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ் ஒழுங்குவிதிகள் “2024 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்” என அழைக்கப்படும்.

*2.* அதிமேதகு சனாதிபதி நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட 2024 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 24/1706/601/102 ஆம் இலக்க விஞ்ஞாபனத்திற்கு 2024, ஓகத்து 26 ஆந் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இவ் ஒழுங்குவிதிகள் வெளியிடப்படுகின்றன.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. இவ் ஒழுங்குவிதிகள், திருத்தம் செய்யப்பட்ட, 2023, சனவரி மாதம் 01 ஆந் திகதிய 2312/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் கட்டாயப் பகுதியொன்றாக வெளியிடப்படுகின்றன.

4. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் 4 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், இலங்கை முதலீட்டு சபையின் (BOI) கீழ் நிறுவப்பட்டு செயற்படுகின்ற நிறுவனமொன்றிற்கு, அந் நிறுவனம் மற்றும் இலங்கை முதலீட்டு சபைக்கிடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் அமைச்சரவையினால் முறையாக அனுமதி வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கமைய அம் மோட்டார் வாகனங்களை ஒன்றுகோர்க்கும் வசதிக்குள் அவ்வாறான நிறுவனமொன்றினால் மோட்டார் வாகனங்களை ஒன்று கோர்ப்பதற்காக 87.02, 87.03 மற்றும் 87.04 இயைபு முறைத் தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பதிவு செய்யப்படாத (புதிய) வெவ்வேறு பாகங்களாக கழற்றப்பட்ட (SKD) தொகுதிகளை இறக்குமதி மற்றும் சுங்க விடுவிப்பு செய்வதற்காக இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை முதலீட்டு சபைக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட வேண்டும்.

அவ் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில், என்ஜின் சிலிண்டர் கொள்ளளவு 3000 கன சென்ரி மீற்றரிற்கு மேற்பட்ட பதிவு செய்யப்படாத (புதிய) வெவ்வேறு பாகங்களாக கழற்றப்பட்ட (SKD) மோட்டார் வாகன தொகுதிகளுக்கு அனுமதி வழங்கக் கூடாது.

5. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு, உரிமம் பெற்ற வங்கிகளுக்கு மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கு செயற்பாட்டு ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.

6. இவ் ஒழுங்குவிதிகள் தொடர்பாக எழுகின்ற எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதி முடிவானது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

EOG 09-0139

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.